செ.வெ.எண்: 66 நாள்: 28.09.2016

## பத்திரிகைச்செய்தி

## கோமாரி நோய் தடுப்பூசி பணி 11-வது சுற்று புதுக்கோட்டை மாவட்டம்:-

புதுக்கோட்டை கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கோமாரி நோய் தடுப்பூசி பணி 01.09.2016 முதல் அன்னவாசல் ஒன்றியம் கீழபழுவஞ்சி கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கோமாரி நோய்தடுப்பூசி போடும் பணி துவக்கிவைக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 3,86,850 கால்நடைகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 100% சதவீதம் தடுப்பூசி பணி எய்தும் வண்ணம் இப்பணி நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

இப்பணிக்கென மாவட்டத்தில் 55 கால்நடை மருத்துவக்குழு ஏற்படுத்தப்பட்டு அப்பணியை மேற்பார்வையிட 7 உதவி இயக்குநர் நிலையிலுள்ள அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இப்பணி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

இதுவரை 2,01,350 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மீதமுள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி தொடர்ந்து நடைபெற்று கொண்டுவருகிறது. கோமாரி நோய் கால்நடைகளுக்கு ஏற்பட்டால் கால்நடைகளுக்கு வாய் மற்றும் கால் குளம்புகளில் புண் உண்டாகி கால்நடைகள் தீவனம் உட்கொள்ள முடியாமலும் நடக்க முடியாமலும் ஆகிவிடும். மேலும் கறவைமாடுகளில் பால் உற்பத்தி குறைந்துவிடும். சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படும். இதனால் கால்நடை வளர்ப்போர்க்கு மிகுந்த பொருளாதார இழப்பு ஏற்படும். ஆகையால் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கால்நடை வளர்ப்போர் தவறாது தங்களது கால்நடைகளுக்கு விடுபாடின்றி தடுப்பூசி போட்டுக்கொண்டு தங்களது கால்நடைகளை நோய் வராமல் பாதுகாத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**